அனுப்புநர்

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி.

ந.க.எண். 127311/எச்1 /2019

நாள் : 05.06.2020

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் / ஜூன் 2020 மேல்நிலை இரண்டாம் ஆண்டு மறு தேர்வு – 24.03.2020 அன்று நடைபெற்ற வேதியியல், கணக்குப் பதிவியல் மற்றும் புவியியல் பாடத் தேர்வுகளுக்கு வருகை புரியாதோர் உள்ள தேர்வு மையங்களின் பட்டியல் – அனுப்பி வைத்தல் – சார்பு.

*******

தங்கள் மாவட்டத்தில் உள்ள மேல்நிலைத் தேர்வு மையங்களில், 24.03.2020 அன்று நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுகளான வேதியியல், கணக்குப் பதிவியல் மற்றும் புவியியல் பாடத் தேர்வுகளை கொரோனா தடுப்பு நடவடிக்கை காரணமாக தேர்விற்கு வருகை புரியாதத் தேர்வர்கள் உள்ள தேர்வு மையங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

பட்டியலில் உள்ள தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்கள் 08.06.2020 (திங்கட்கிழமை ) முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தங்களது தேர்வு மையங்களில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மறு தேர்வெழுதவுள்ள தேர்வர்களின் முகப்புத் தாள்களை, பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். பதிவிறக்கம் செய்த முகப்புத் தாட்களை அந்தந்த பாடங்களுக்குரிய

முதன்மை விடைத்தாளுடன் தைக்கவேண்டும். தேர்வு மையத்தில் இருப்பில் உள்ளதைவிட இப்பணிக்கு கூடுதலாக முதன்மை விடைத்தாள்கள் மற்றும் கூடுதல் விடைத்தாள்கள் தேவைப்பட்டால், அவற்றை முதன்மைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள அறிவுறுத்திடுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** பட்டியல்

**ஒம்/–**
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.